

# அலைகள் ஓய்வதில்லை

பாவலர் கிரியேஷன்ஸ் வழங்கும்

பாரதிராஜாவின்

# அலைகள் ஓய்வதில்லை

நடிகர்கள்

| | |
|---|---|
| கார்த்திக் | விச்சு |
| தியாகராஜன் | டேவிட் |
| ராதா | மேரி |
| ஸ்மிதா | எலிசபெத் |
| கமலா காமேஷ் | விச்சுவின் தாய் |

மற்றும் கதாபாத்திரங்கள்

இசை
இளையராஜா

பாடல்கள்

கங்கை அமரன், இளையராஜா,
வைரமுத்து, பஞ்சு அருணாசலம்

வசனம்
மணிவண்ணன்

தயாரிப்பு
ஆர். டி. பாஸ்கர்

டைரக்ஷன்
பாரதிராஜா

# முழு வசனம்

(ஆற்றில் இளம் பெண்கள் குளித்துக் கொண்டிருக்கின்றனர்)

ஒருத்தி: நெறஞ்ச வெள்ளிக்கிழமை மஞ்சள் தேச்சு குளிச்சாலே தனி சொகந்தான் இல்லடி.

மற்றொருத்தி: ஏண்டி அப்பா வீட்ல இருக்கும் பொழுதே இப்படி மஞ்சளை கரைக்கிறியே, நாளைக்கி உம்புருஷன் வீட்டுக்கு போனையின்னு அவன் சம்பாரிக்கிற காசெல்லாம் மஞ்சள்ளேயே கறைஞ்சி போயிடும்.

(மற்றொரு புறம் விச்சுவும் நண்பர்களும் பாடியபடி வந்து கொண்டிருக்கின்றனர்)

அனைவரும் : நன்னனன்ன...நானன்னனு...

(ஒவ்வொருவராக தண்ணீரில் குதிக்கின்றனர் ஒரு கோவணம் தண்ணீரில் மிதக்கிறது)

ஒருவன் : டேய் கோமணண்டா...டேய்.

(ஆண்களும் பெண்களும் குளித்தல்)

ஒருவன்: டேய் குட்டையா மேலே வந்தா கொண்ணுருவேன்

கரையிலிருப்பவன் : ம்...வந்துராதப்பா பையன் செய்துறப் போருன்...

ஒருவன் : நெஜம்மா வந்துருவண்டா...

பெண் : சீ...அந்த சனியனே பாருங்கடி

(குட்டையன் கோவணத்தை பிடித்துக் கொண்டிருத்தல்)

பெண் : சீ ஏய் வாங்கடி அந்த சனியன் எந்திரிச்சாலும் எந்திரிச்சுடுவான் வாங்கடி போகலாம்

(பெண்கள் கரையேற கரையில் அமர்ந்திருக்கும் இளைஞர்கள்)

கோழிக்குஞ்சு கோவமெல்லாம் கொறஞ்சி போச்சுதாம் குதிரை குட்டி நின்னுகிட்டு மொறச்சு பாக்குதாம் ஏ...ஏ...மொறச்சி பாக்குதாம்

ஒருவன்குரல்: வந்துட்டேண்டா...

மற்றவர்கள் குரல்: கடவுளே எங்களெ காப்பாத்த யாருமே இல்லியா

(பெண்கள் திரும்பிப் பார்த்து சீ என்று கூறியபடி வேகமாகப் போகிறார்கள்)

மாதா கோயிலருகே பாதரும் இன்னொருவரும் பேசிக்கொண்டுவர

ஒருகுழந்தை : குட்மார்னிங் பாதர்

பாதர் : குட்மார்னிங்

பாதருடன் வருபவன்: இருக்கறது மெட்ராசா இருந்தாலும் வாரம் ஒருமுறையாவது நம்மூர் கோயிலே பார்த்துட்டு போகலேன்னு மனசே சரியா இருக்கிறதில்லே பாதர்.

(எதிரே விச்சுவும் நண்பர்களும் வந்து கொண்டிருக்கின்றனர்)

அனைவரும் : குட்மார்னிங் பாதர்

பாதர் : குட்மார்னிங், குட்மார்னிங் என்ன பரீட்சை எல்லாம் முடிஞ்சுதா

ரமேஷ் : இல்லே பாதர் நாளைக்கிதான் கடைசி பரீட்சை பாதர்.

பாதர் : நாளைக்கு என்ன பரீட்சை

கோபால் : கணக்கு பரீட்சை பாதர்

பாதர் : கணக்கு பரீட்சைங்கறீங்க இப்படி ஊரை சுத்தறீங்க

விச்சு : பாதர் சாரி பாதர்.

பாதர் : விச்சு நீயுமா இப்படி ஊரை சுத்தறே உங்கம்மா எவ்வளவு கஷ்டப்பட்டு நாலு கொழந்தைகளுக்கு பாட்டு சொல்லி கொடுத்து உன்னெ படிக்க வைக்கிறுங்க.

(ஆர்மோனியப் பெட்டியுடன் விச்சுவின் தாய் எதிரே சிலபெண் குழந்தைகள் பாடிக் கொண்டிருக்கின்றனர்)

வி. தாய் : சம்போ......(குழந்தைகளும் பாட)

வி. தாய் : நன்னு பாடுறீங்களே சூரியோதயம்

(அடுப்படியிலிருக்கும் வி. தாய் அடுத்த முன்னறையிலிருக்கும் விச்சுவிடம்)

வி. தாய் : அந்த காலத்தில் குழந்தைகள் பரீட்சைக்குப் போகும் போது லட்சணமா விபூதியும் குங்குமமும் இட்டுண்டு போவா இப்ப என்னடான்னு எலேய தொடச்சு போடறமாதிரி நெத்தியை தொடச்சு போட்டுட்டு போறதுகள்.

விச்சு : என்னம்மா காலையிலே மனசுகுள்ளாற கச்சேரி நடத்திண்டிருக்கே

வி. தாய் : நா ஏம் பாட்டை பாடிண்டிருக்கேண்டா ஏண்டா விச்சு பரீட்சைன்னு தெரிஞ்சும் காலங்கார்த்தாலே எழுந்துக்காம எட்டு மணிக்கு எழுந்துண்டு திடீரென்று ரெக்கையைக் கட்டிக்கிட்டு பறந்தா எப்பிடிடா.

விச்சு : பரீட்சைக்கு படிக்க வேண்டியதெல்லாம் நேத்தைக்கே படிச்சு நேத்து ராத்திரி பேளுவுல நெறப்பிட்டேன் போன உடனே சர்ருன்னு எறக்க வேண்